### கலைஞரின் படைப்புகளில் மிக முக்கியமான படைப்பு - தளபதி ஸ்டாலின்!

# தமது வாழ்க்கை முழுவதையும் தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்தவர் கலைஞர்!

## சென்னை தெற்கு மாவட்டத்தில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கப் பொதுக்கூட்டத்தில் திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் பேச்சு!

**சென்னை, செப். 23 -**

**கலைஞரின் படைப்புகளில் மிக முக்கியமான படைப்பு தளபதி ஸ்டாலின் என்றும் தன் வாழ்க்கை முழுவதையும் தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்தவர் கலைஞர் என்றும் திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன், சென்னை தெற்கு மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கப் பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.**

**சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற மாபெரும் கருத்தரங்கப் பொதுக்கூட்டத்தில் மூத்த இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

நான் இந்த மேடையில் ஒரு இயக்குநராக இயக்குநர்கள் இருக்கிற மேடையில் சேர்க்கப்பட்டிருக்கிறேன் என்றால் அதற்கு முழு காரணம் கலைஞர் அவர்கள்தான் என்பதை நன்றியோடும், வணக்கத்தோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சினிமாவிற்கு ஏன் வந்தேன் என்று கேட்டீர்கள் என்றால், கலைஞரின் பராசக்தி வசனங்களை கேட்டும் - பார்த்தும் - நடித்தும் - நடிகர் திலகம் நடித்து, அதை நாங்கள் பள்ளிக்கூடங்களில் பேசி நடித்து பெயர் வாங்கினோம். நாங்கள் மாணவனாக அப்படியெல்லாம் வாழ்கின்ற அந்த வாழ்க்கையின் போது, கலைஞரைப்போல, நடிகர் திலகத்தைப்போல நாமும் ஏன் கலையுலகிற்கு போகக்கூடாது என்று என் மனதில் ஒரு பொறி தட்டியது. அதனுடைய விளைவுதான் நாங்கள் எல்லாம் திரையுலகத்திற்கு வந்தோம்.

**பல இளைஞர்களை திரையுலகத்திற்கு அழைத்து வந்தது கலைஞரின் எழுத்து!**

கலைஞருடைய எழுத்தும், பேச்சும்தான் பல இளைஞர்களை திரையுலகத்திற்கு அழைத்து வந்தது என்பதை பெருமையோடும், மகிழ்ச்சியோடும் இந்த நேரத்தில் இருகரம் கூப்பி கலைஞருக்கு என்னுடைய நன்றிகளை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். அநேகமாக எல்லோருக்கும் அந்த பாதிப்பு இருக்கும். அதன் மூலமாக நாங்கள் வந்தோம். அதன் மூலமாகத்தான் நாங்கள் எல்லாம் வளர்ந்தோம். அதன் மூலமாகத்தான் நாங்கள் இயக்குநர்களாக மேடையில் இருக்கிறோம். எனவே இந்த இயக்குநருக்கு கலைஞருடைய அந்த இயக்கம்தான் காரணம் என்பதை மகிழ்ச்சியோடு உங்களிடத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அவர் சினிமாவில் வசனங்கள் எழுதியிருக்கிறாரே, அந்த வசனங்களை எடுத்துப் பாருங்கள். பராசக்தி வசனத்தை கேளுங்கள். மனோகராவை கேளுங்கள். திரும்பிப் பாரை கேளுங்கள். அவ்வளவிலும் கருத்தோடு செறிந்த வசனங்கள்தான் இருக்கும். அவருடைய எழுத்துக்களையோ, பேச்சுக்களையோ வீணாக்கமாட்டார். நான் ஒரு இயக்குநர். அவர் எழுதிய ஸ்கிரிப்ட்-ஐ எல்லாம் நான் பார்த்திருக்கிறேன், படித்திருக்கிறேன். ஒரு பேப்பரை இரண்டு பகுதியாக மடித்து, ஒரு பகுதியில் காட்சி நம்பர் - யாருடைய வீடு - இரவு நேரமா? பகல் நேரமா? இதெல்லாம் எழுதி கோடு போட்டுவிட்டு, அதன் இன்னொரு பகுதியில் முழுவதும் அந்தக் காட்சி எதற்காக வந்திருக்கிறது என்பதை விளக்கமாக எழுதுவார். இதில் ஹீரோ - ஹீரோயின் பேசிக் கொள்கிறார்கள். இதில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக நான் இப்படி வசனங்கள் எல்லாம் எழுதியிருக்கிறேன். எனவே இயக்குநர்கள் இதனை ஒரு முறை படித்து பார்த்துக் கொள்ள வேண்டும் என்று இயக்குநர்களுக்கு ஒன்று இருக்கும்.

இன்னொரு பகுதியில் வசனம், அந்த வசனத்தில் வசனம் மட்டும் இருக்காது. அந்த வசனத்தில் நடிகர்கள் நடிகைகள் எப்படி முகபாவம் காட்ட வேண்டும் - அந்த ஸ்டைல் எப்படி இருக்க வேண்டும் - அது கோபமாக இருக்க வேண்டுமா? நளினமாக இருக்க வேண்டுமா? கிண்டல் செய்கிற மாதிரி இருக்க வேண்டுமா? என்பதையும் பிராக்கெட் போட்டு காண்பித்திருப்பார். ஆக மொத்தம் ஒரு இயக்குநருக்கு கலைஞரின் அந்த ஸ்கிரிப்ட்டை வாங்கிப் பார்த்தாலே, நாமே அதை இயக்கம் செய்ய முடியும் என்ற அளவிற்கு ஒரு டைரக்டராக கற்பனை செய்து அந்தக் காட்சியை வடிவமைத்துக் கொடுத்திருப்பார் கலைஞர் என்பதை ஒரு இயக்குநர் என்ற முறையில் நான் பாராட்டுகிறேன். எனவே இயக்குநருக்கு வேலை இருக்காது. பெரும் பகுதியில் அவர் எழுதிக் கொடுக்கும் ஸ்கிரிப்ட்டை ஒழுங்காகப் படித்து, அதைப் படமாக்கினால் நிச்சயமாக அந்தப் படம் நல்ல படமாக வந்துவிடும். எனவே எல்லோரும் கலைஞரைப் பற்றி சொல்கிறபோது, எழுத்தாளர் - பேச்சாளர் என்று சொல்கிறபோது, நான் உரிமையோடு சொல்கிறேன், அவர் வெறும் கதை வசனகர்த்தா அல்ல, அவர் ஒரு சிறந்த இயக்குநர் என்பதை மூத்த இயக்குநர்களாகிய நாங்கள் அத்தனை பேரும் ஒப்புக்கொள்வோம் என்பதை உங்களிடத்தில் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**சிவாஜி - எம்.ஜி.ஆருக்கு சிபாரிசு செய்தவர் கலைஞர்!**

அடுத்து, நம்முடைய பராசக்தியில் சிவாஜி கணேசன் அவர்கள் அறிமுகமானார்கள். அந்தப் படத்தை பி.ஏ. பெருமாளும், ஏ.வி. மெய்யப்ப செட்டியாரும் கூட்டாக தயாரித்தார்கள். செட்டியார் அவர்கள் வியாபாரி - கமர்சியல். பி.ஏ.பெருமாளிடம் செட்டியார் அவர்கள் சொன்னார், "இது போன்ற ஒரு நல்ல கதை கிடைத்திருக்கிறது. வசனம் எழுதுவதற்கு கலைஞர் கிடைத்திருக்கிறார். அப்படி இருக்கும்போது யாரோ ஒரு புது பையனை போட்டு எடுப்பதைவிட கே.ஆர்.ராமசாமியை போட்டு எடுக்கலாமே" என்று செட்டியார் முடிவு செய்கிறார்.

அப்போது பி.ஏ.பெருமாள் அவர்கள், "இல்லை. நிச்சயமாக அந்தப் பையன் நன்றாக நடிக்கிறான். நான் வேலூரில் பார்த்து வந்தேன். அவனது நடிப்பை பார்த்துத்தான், நான் அவனைப் போட வேண்டும்" என்று ரெக்கமண்ட் செய்கிறேன் என்று சொன்னார். செட்டியார் அவர்கள், "இல்லை, புது பையனை போட்டு இந்தக் கதையை கெடுக்கக்கூடாது" என்றார். அப்போது கலைஞர், "இல்லை, என்ன அவனுக்கு குறை? கன்னம் ஒட்டிப்போய் இருக்கிறது. மெல்லிசாக இருக்கிறான். ஒல்லியாக இருக்கிறான். ஒரு கதாநாயகன் ஸ்டாண்டர்டில் இல்லை என்பதுதானே உங்களுடைய குறிக்கோள். அவன் வறுமையிலேயே கஷ்டப்பட்டு நாடக கம்பெனியில் இருந்தவன். இப்போது சூட்டிங்-ஐ நிறுத்திவிட்டு 3 மாதத்திற்கு சாப்பாடு போட்டு, அவனை ஆளை தேர்த்தி விட்டு அதன்பிறகு படம் எடுப்போம். நிச்சயமாக அவன் சரியாக இருப்பான். என்னுடைய வசனத்திற்கு சரியாக, முறையோடு அழகான தமிழில் உச்சரிப்போடு பேசக்கூடிய நடிகன் சிவாஜி கணேசன். எனவே சிவாஜி கணேசனைத்தான் போட வேண்டும். எனவே செட்டியார் அவர்களே, 3 மாதம் இடைவெளி விட்டுவிட்டு சிவாஜி கணேசன் அவர்களின் உடம்பை வளருங்கள். நிச்சயமாக அவன் சரியாக இருப்பான்" என்று சொல்லி, நம்முடைய யுனைடட் இந்தியா காலனியில் ஒரு வீடு பிடித்து சிவாஜி கணேசனை உட்கார வைத்து செட்டிநாட்டில் இருந்து சமையல்காரர்களை அழைத்து வந்து செட்டிநாட்டு சாப்பாடு போட்டு சிவாஜி கணேசனை செட்டியார் அவர்கள் வளர்த்தார்கள். அவர் கன்னமெல்லாம் ஊதிய பிறகு முதலில் எடுத்ததையும் சேர்த்து, திரும்ப அந்தப் படத்தை எடுத்து அதன் மூலமாகத்தான் சிவாஜி கணேசன் அவர்கள் தமிழகத்தின் சிறந்த நடிகனாக - உலகத்தின் சிறந்த நடிகனாக வந்தார் என்பதற்கு கலைஞருடைய அந்த சிபாரிசுதான் காரணம். அங்கு சிவாஜி சிறந்த நடிகனாக அறிமுகப்படுத்துவதற்கு இயக்கமாக இருந்து செயல்பட்டு செட்டியார் இடத்தில் சொல்லி வைத்த பெருமை கலைஞர் அவர்களைச் சேரும். எனவே அதுவும் அவருடைய இயக்கம்தான்.

சரி ஒருவரைப் பற்றிச் சொல்லிவிட்டால் இன்னொருவரைப் பற்றி சொல்ல வேண்டும் அல்லவா... சிவாஜியை அறிமுகப்படுத்துவதற்கு கலைஞர் அவர்கள் இவ்வாறு உதவினர்.

**சென்சார் ஆபீசருடன் வாதம்!**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சின்னச் சின்ன வேடங்களில் நடித்துக் கொண்டிருந்தபோது, ராஜகுமாரி என்ற படத்தில் கதாநாயகனாக போட்டு எடுக்கலாம் என்று மோகன் தியேட்டர்சில் முடிவு செய்தார்கள். அந்தப் படத்தை இயக்கியவர் எல்லிஸ் ஆர். டங்கன் என்ற வெளிநாட்டுக்காரர். அவர் எம்.ஜி.ஆர்.-ஐ பார்த்துவிட்டு, "அவருக்கு முகத்தில் ஒரு கோடு இருக்கிறது. அது படத்தில் அசிங்கமாக தெரியும்." என்று சொல்லிவிட்டார். உடனே கலைஞர் சென்றார், "இயக்குநர் சார், அவருக்கு முகத்தில் கோடு இருக்கிறது, அது அசிங்கமாக தெரியும் என்று நினைக்கிறீர்கள் அல்லவா... இப்போது பாருங்கள் என்று சொல்லி சின்ன தாடியை கொண்டு வரச்சொல்லி அந்த கோடு தெரிந்த இடத்தில் அதை ஒட்டி இப்போது கோடு தெரிகிறதா" என்றார். "இல்லை" என்றார் டைரக்டர். இதை ஒட்டி அவரை படத்தில் கதாநாயகன் ஆக்குங்கள் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் கதாநாயகன் ஆக்குவதற்கு இயக்கியவர் கலைஞர் அவர்கள் என்பதையும், நம்முடைய கலைஞர்தான் சிவாஜியையும், புரட்சித் தலைவரையும் அறிமுகப்படுத்துவதில் இயக்கமாக இருந்தார் என்பதையும் உங்களிடத்தில் நான் இந்த நேரத்தில் பதிவு செய்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

'திரும்பிப் பார்' என்ற படத்தில் முக்கால் பகுதியை சென்சாரில் வெட்டி விட்டார்கள் என்று ஒரு செய்தி. அப்போது கலைஞரிடம் சென்று சொன்னார்கள், "கிட்டத்தட்ட 75 சதவிகிதம் வசனத்தை காலி செய்து விட்டார்கள்." அப்போது சென்சார் ஆபிசராக இருந்தவர் சாஸ்திரி. அவர் ஒரு கண்டிப்பான சென்சார் ஆபிசர். அப்போது கலைஞர் சொன்னாராம், "நீங்கள் யார் சென்று பேசினாலும் அவர் ஒத்துவர மாட்டார். நானே சென்று பேசுகிறேன்" என்று கலைஞரே சென்சார் ஆபீஸ்-க்கு கிளம்பிச் சென்றார். அப்போது சென்சார் ஆபீஸ் - பனகல் பார்க் பக்கத்தில் மூன்றாவது மாடியில் இருந்தது. லிப்ட் கிடையாது. மூன்று மாடியும் ஏறித்தான் செல்ல வேண்டும். கலைஞர் மூன்றுமாடி ஏறி செல்கிறார். அந்த சாஸ்திரி அவரை பார்த்து கிண்டலாக சிரித்துக்கொண்டு, "நீங்கள் திருமூர்த்தி மலைக்கெல்லாம் போக மாட்டீர்கள். திருப்பதி மலையெல்லாம் ஏற மாட்டீர்கள். இன்றைக்கு என்னுடைய மலை ஏறி வந்திருக்கிறீர்கள்" என்று அந்த ஆள் கிண்டல் செய்கிறார். நம்முடைய கலைஞர் சும்மா இருப்பாரா... அந்தக் கிண்டலுக்கு கிண்டல் செய்பவர் கலைஞர். அவர் சொன்னார், "திருப்பதி மலை ஏறி போனாலும் மொட்டை அடிக்கலாம், உங்கள் மலை ஏறி வந்தாலும் நீங்கள் மொட்டை அடிக்கிறீர்கள்." அதுதான் கலைஞர். அவ்வாறு சொல்லி அவருடன் வாதிட்டு பல வசனங்களை திருப்பினார் என்பது வரலாறு.

**காரைக்குடி பகுதியில் இயக்கத்தை வளர்த்தது எங்கள் குடும்பம்!**

என்னுடைய தந்தையார் ராமசுப்பையா அவர்களும், என்னுடைய தாயார் விசாலாட்சி அவர்களும் அந்தப் பகுதியில் திராவிட இயக்கத்தை வளர்த்தவர்கள். அதிலும் பெரியாரோடும், அண்ணாவோடும், கலைஞரோடும் - இந்தக் குடும்பம் எல்லாம் ஒரே குடும்பம். இந்த செல்போனில் பேசும் குடும்பம் அல்ல, ஆத்மார்த்தமாக - உளப்பூர்வமாக,

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து



அகநக நட்பது நட்பு" - என்று நெஞ்சத்தின் மூலமாக பழகியவர்கள் இந்த திராவிட இயக்கத்தின் குடும்பம்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் காரைக்குடி வருகிறார்கள். போஸ்டர் அடிப்பதற்கு பணம் இல்லை. அப்போது நம்முடைய சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் அங்கு பேராசிரியராக பணியாற்றுகிறார்கள். என்னுடைய தந்தையார் அவர்கள், வாளியில் சுண்ணாம்பு கலக்கி வைத்துக்கொண்டு, பிரஷ் வாங்குவதற்குகூட காசு இல்லாமல், பனை மட்டையை நசுக்கி அதில் போட்டு நம்முடைய சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் சுவற்றில் எழுதுவார்கள். இன்றைக்கு - இந்த தேதியில் - இந்த இடத்தில் - கலைஞர் கருணாநிதியும், பேரறிஞர் அண்ணாவும் பேசுகிறார்கள் என்று, போஸ்டருக்குக்கூட காசில்லாமல் சுவற்றில் எழுதிய அந்த காலம்தான் நம்முடைய பொற்காலம். எனவே அப்படி வளர்ந்த கட்சி. எனவே அப்படிப் பட்டவர்கள் எல்லாம் இருந்த கட்சிதான் நம்முடைய கட்சி. அப்படி உழைத்தார்களே அந்த உழைப்பாளிகளுக்கு - அந்தத் தொண்டர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக் களையும் கலைஞருடைய சார்பில் இப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

**கலைஞரின் கல்லக்குடி போராட்டம்!**

ஒரு விஷயம், கல்லக்குடி போராட்டம். உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். லால்குடியில் மாநாடு - மும்முனைப் போராட்டத்திற்கு அண்ணா அறிவிக்கிறார்கள். அதை அறிவித்துவிட்டு வந்த அறிஞர் அண்ணா அவர்கள், "அந்த டால்மியாபுரம் போராட்டத்திற்கு தம்பி கருணாநிதியை தளபதியாக நியமிக்கிறேன். அவன் போராட்டத் தலைவனாக அந்தப் போராட்டத்திற்கு தலைமை ஏற்பார். - "தம்பியே சென்று வா... போய் வா... வழக்கம் போல வெற்றியோடு திரும்பி வா... போய் வா... போய் வா... என வாழ்த்துகிறேன்" என்று அண்ணா அவர்கள் சொல்லி முடித்தார். அடுத்த கலைஞர் அவர்கள் பேச வருகிறார், "தலைவரே, அவர்கள் ஒன்றுமே சொல்லவில்லை. போய் வா... போய் வா... என்று அண்ணா அவர்கள் சொன்னார்களே அந்த வார்த்தையை எடுத்துக் கொண்டு, போய் வருகிறேன் அண்ணா... போய் வருகிறேன். நான் டால்மியாபுரத்துக்கு போகிறேன். அங்கு சென்று தண்டவாளத்தில் தலை வைத்து படுக்கிறேன். நான் படுக்கின்றபோது அந்த ரயில் இன்ஜின் டிரைவர் கொடுமைக்காரனாக இருந்தால் அந்த ரயிலை என் கழுத்தின்மீது ஏற்றட்டும். அப்போது என் கழுத்தில் இருந்து வடியுமே ரத்தம், அந்தத் ரத்தத்தை பேரறிஞர் அண்ணா அவர்களே எடுத்து அந்த டால்மியாபுரம் பெயரை அழியுங்கள். நான் பிறந்த பயனை அடைந்து விடுவேன்" என்று சொல்லி, அவர் சொல்லியதைப்போலவே டால்மியாபுரம் சென்று ரயில்வே தண்டவாளத்தில் படுத்து போராட்டம் செய்து கைதானார்.

அதன் பிறகு இரண்டாவது அணிக்கு என்னுடைய தந்தையார் இராம சுப்பையா அவர்கள் தலைமை வகித்தார். மூன்றாவது அணிக்கு கவியரசர் கண்ணதாசன் அவர்கள் தலைமை வகித்தார். மூவரும் கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார்கள். 6 மாதம் தண்டனை. அங்கே இருக்கிறபோதும் நம்முடைய கலைஞர் அவர்கள் இயங்கினார்கள். அங்கு 'ஒரு மாதிரி மந்திரி சபை' அமைத்து, அவர் முதலமைச்சராக இருந்து, என் தந்தையார் போன்றவர்களை எல்லாம் மந்திரிகளாக்கி அவர்களுக்கு டிபா ர்ட்மென்ட்கள் எல்லாம் கொடுத்து சிறையிலேயே ஆட்சி நடத்தியவர் கலைஞர் அவர்கள். எனவே 5 முறை முதலமைச்சர்... 5 முறை முதலமைச்சர் என்று சொல்கிறார்கள். தயவு செய்து குறித்துக் கொள்ளுங்கள். நம்முடைய கலைஞர் அவர்கள் திருச்சியில் நடத்தியதும் ஒரு அரசாங்கம். அந்த அரசாங்கத்திற்கும் அவர்தான் முதலமைச்சர். எனவே அவர் 5 முறை முதலமைச்சராக இருந்தார் என்பதையும் உங்களிடத்தில் பதிவு செய்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

**எங்கள் வீட்டு பிள்ளை!**

இன்னும் ஒரு விஷயம், எங்களைப் பொறுத்த அளவில் அவர் தம்பி... தம்பி என்றுதான் அழைப்பார்கள். குகநாதன் சார் அவர்களுடைய கம்பெனியில் 5 படங்கள் நான் செய்திருக்கிறேன். முதல் படம் கனிமுத்து பாப்பா, அதன் பிறகு பெத்த மனம் பித்து. அந்தப் படம் சித்ரா தியேட்டரில் ரிலீஸ் ஆனது. முத்துராமன் - சாவித்திரி இவர்கள் எல்லாம் நடித்த படம். ஒவ்வொரு நாள் மாலையிலும் அந்த தியேட்டரின் வாசலில் சென்று நிற்போம். ஹவுஸ்புல் என்ற ஒரு போர்டு போடுவார்கள். அந்த சித்ரா தியேட்டரில் ஹவுஸ்புல் என்று போர்டு போட்டால் நாங்கள் இரண்டு பேரும் இரண்டு நாள் சாப்பிட்ட மாதிரி. இன்றைக்கு ஹவுஸ்புல் ஆகிவிட்டது... இன்றைக்கு ஹவுஸ்புல் ஆக்கிவிட்டது என்று அங்கு சென்று பெருமிதம் அடைவோம். புதிதாக வரும் இளைஞர்களுக்கு அந்த வெற்றியின் செய்தி அவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். இந்த வெற்றிமாறன் வெற்றி பெறுகிறார் என்றால், ஒவ்வொரு வெற்றியிலும் அந்த உழைப்புக்கு கிடைத்த பலன் நமக்கு கிடைக்கிறபோது அந்த வெற்றி பூரணத்துவம் அடையும். அப்படி பூரித்துப்போய் இருக்கிறோம். அந்தப் படம் வெற்றிகரமாக ஓடி, தாய்மார்களுக்கு அந்தப் படம் பிடித்து போய்விட்டது என்றால் அந்தப் படம் நிச்சயமாக 100 நாள். அந்த படம் 100 நாள் ஓடியது. உடனே எனக்கும் - குகநாதன் சார் அவர்களுக்கும் ஒரு ஆசை. "வளர்ந்து வரும் நேரத்தில் இந்தப் படம் 100 நாள் ஓடி இருக்கிறது. அதை ஒரு விழாவாக செய்துவிடலாம்" என்றேன். அவர் எப்போதும் விளம்பரத்தில் உற்சாகமாக இருப்பார். அவருடைய ஆபீசில்தான் பெரும்பாலும் எல்லா பத்திரிகையாளர்களும் இருப்பார்கள். மாலை நேரம் ஆகிவிட்டால் எல்லோரும் இங்கு வந்துவிடுவார்கள். எல்லோரையும் கூடிப்பேசி விழா எடுப்பது என்று முடிவு செய்துவிட்டு, 'பெத்த மனம் பித்து 100-வது நாள் விழா'. அதற்கு தலைமை ஏ.வி. மெய்யப்ப செட்டியார். ஷீல்டு எல்லாம் கொடுப்பதற்கு கலைஞர் என்று முடிவு செய்துவிட்டு விழா நடத்தினோம். விழா நடைபெறுகிறது. செட்டியார் பேசுகிறபோது, "இந்த பெத்த மனம் பித்து படத்தை இயக்கியிருக்கும் இயக்குனர் எங்களுடைய ஸ்டூடியோவில் வேலை கற்றுக் கொண்டவர். எனவே முத்துராமன் எங்கள் வீட்டு பிள்ளை" என்று சொல்லிவிட்டார். இதை கலைஞர் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர் விடுவாரா... வந்தார், "இங்கே செட்டியார் பேசுகிறபோது, முத்துராமனை எங்கள் வீட்டுப் பிள்ளை என்று சொல்கிறார். அவர் வீட்டு பிள்ளை இல்லை, முத்துராமன் எங்கள் வீட்டுப் பிள்ளை. என்னுடைய தொண்டர் ராம சுப்பையாவின் பிள்ளை தான் முத்துராமன். எனவே என்னுடைய தொண்டர் ராமசுப்பையாவின் மகன் முத்துராமன், உங்கள் வீட்டுப் பிள்ளையாகுவதற்கு முன்பே அவர் எங்கள் வீட்டுப் பிள்ளை. எனவே முத்துராமன் எங்கள் வீட்டுப் பிள்ளை என்று அந்த மன்றத்தில் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். இதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். எங்கள் வீட்டுப் பிள்ளை... எங்கள் வீட்டுப் பிள்ளை என்று உரிமையோடு முதலாளியும் கொண்டாடினார் - கலைஞரும் கொண்டாடும்போது எனக்கு எவ்வளவு உற்சாகமாக இருந்திருக்கும். இவருக்கு எவ்வளவு சந்தோஷம் இருந்திருக்கும். எனவே கலைஞர்களுக்கு வெற்றி கிடைத்தால்தான் அந்த மகிழ்ச்சி சந்தோஷம். எனவே அந்த மாதிரி முதல் நிகழ்ச்சியில் சந்தோஷப்படுவதற்கு கலைஞர் அவர்கள் எங்கள் வீட்டுப் பிள்ளை என்று சொல்கிறதுபோது இருந்த உணர்வு, இன்றைக்கும் என் மனதில் புத்துணர்ச்சி உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. எனவே வெற்றிகள் கலைஞர் மூலமாக வரும்போது அது எங்களுக்கு மிகவும் பெருமையாக இருக்கும், மகிழ்ச்சியாக இருக்கும்.

**முழு நேரத்தையும் பயன்படுத்தி சாதனைகளை செய்தவர் கலைஞர்!**

அவருடைய செயல்பாடுகளை எல்லாம் பார்க்கும்போது, 5 முறை முதலமைச்சர், இவ்வளவு சினிமா, கலையுலகம், பேச்சு, சொற்பொழிவு இது எல்லாம் பார்த்தால் அவ்வளவு இருக்கிறது. ஒரு மனிதனால் இவ்வளவு செய்ய முடியுமா என்கிற சந்தேகம் வருகிற அளவிற்கு தன்னுடைய முழு நேரத்தையும் பயன்படுத்தி, தான் செய்த சாதனைகளை அவர் பதிவு செய்துவிட்டு போயிருக்கிறார் என்பதை இங்கிருக்கும் இளைஞர்களே உங்கள் இடத்தில் பதிவு செய்கிறேன். முடியுமா என்று கேட்டால், என்னால் முடியும் என்று இயங்கி, இயக்கி காட்டியிருக்கிறார்.

இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்? கலைஞருடைய கொள்கைகளை பின்பற்றுகிறோம். செயல்களை பின்பற்றுகிறோம் என்பதல்ல... அவருடைய வாழ்க்கையை பின்பற்றி அவரைப்போல சாதனைகளை படைக்க வேண்டும் என்பதை இந்த நாளில் நீங்கள் எல்லாம் சபதமாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஒரே ஒரு வழி - நேரம். ஒரு நேரத்தையும் அவர் வீணாக்கியது இல்லை. ஒரு நிமிஷத்தைகூட அவர் வீணாக்க மாட்டார். எல்லா நிமிடங்களிலும் அவர் வேலை செய்து கொண்டிருப்பார். இரவு 12 மணிக்கு மேல் பார்த்தால் படுக்கையறையில் அவர் படித்துக் கொண்டிருப்பார். அங்கிருக்கும் உதவியாளருக்கு என்ன செய்வார் தெரியுமா? ஏதாவது சந்தேகம் வந்தால், அவருக்கு புத்தகம் எடுத்துக் கொண்டு கொடுக்க வேண்டும். அதற்காக இரவு 12 மணிக்கும் ஒரு உதவியாளர் கூடவே இருப்பார். அவருக்கு அறிவுரைகள் சொல்வார், அந்த விளக்கு அணைந்த பிறகுதான் நீ வீட்டிற்கு செல்ல வேண்டும் என்று சொல்லிவிட்டு, படித்துக் கொண்டே இருக்கும் கலைஞர் விளக்கை அணைத்த பிறகுதான் அவருடைய உதவியாளரே வெளிய செல்ல முடியும். எனவே படித்தார்... படித்தார்... படித்தார்... ராமானுஜர் என்ற ஒரு தொடர். அந்த ராமானுஜரை பற்றி எழுதுவதற்காக படித்த புத்தகங்களை பார்த்தீர்கள் என்றால், 10 புத்தகங்களுக்கு மேல் படித்துவிட்டுதான் அந்த ராமானுஜத்திற்கு வசனம் எழுதினார். எவ்வளவு ஈடுபாடு இருக்க வேண்டும்.

எனவே எவ்வளவு படைத்தார்? எவ்வளவு செய்தார்? என்று இவ்வளவு படைப்புகளையும் உங்களுக்கு சொன்னோம். அதில் மிக முக்கியமான படைப்பு தளபதி ஸ்டாலின் அவர்கள். அவர் படித்த புத்தகங்களைவிட, கொடுத்த புத்தகங்களைவிட, கொடுத்த சினிமாக்களைவிட. பிரச்சாரங்களைவிட நமக்கு கொடுத்திருக்கும் படைப்பிலேயே சிறந்த படைப்பு நம்முடைய தளபதி ஸ்டாலின் அவர்கள் என்பதை உங்களிடத்தில் பதிவு செய்து கொள்ள ஆசைப்படுகிறேன். தளபதி ஸ்டாலின் அவர்களை அழைத்து வந்து முதலமைச்சர் நாற்காலியில் வைத்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். இல்லை, அவரை ஒரு புடம்போட்ட அரசியல்வாதியாக கலைஞர் அவர்கள் ஆக்கினார்கள் என்பதை உங்களிடத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரே ஒரு நிகழ்ச்சி - தமிழகத்தில் எமர்ஜென்சி வந்தபோது, கலைஞர் வீட்டுக்கு காவல் துறையே வருகிறது. காவல்துறை வந்தவுடன் 'என்னை கைது செய்யப் போகிறீர்களா?" என்று கலைஞர் கேட்கிறார். உடனே கலைஞர் இடத்தில் அந்த அதிகாரிகள் சொல்கிறார்கள், "உங்களை கைது செய்ய வரவில்லை. உங்கள் மகன் ஸ்டாலினை கைது செய்ய வந்திருக்கிறோம்." என்று சொல்கிறார்கள். அப்போது கலைஞர் அவர்கள் சொல்கிறார், "ஸ்டாலின் பக்கத்து ஊருக்கு பிரச்சாரம் செய்ய சென்றிருக்கிறான். காலையில் வந்துவிடுவான். வந்தவுடன் நானே உங்களுக்கு போன் செய்து சொல்கிறேன். அதன்பிறகு வந்து அவனை கைது செய்யுங்கள்." என்று போலீசாரிடத்தில், தந்தை - பெற்ற குழந்தையை கைது செய்யுங்கள் என்று சொல்கிறார். அதன்பிறகு ஸ்டாலின் கூட்டம் முடிந்து வருகிறார். ஸ்டாலினிடத்தில் சொல்லி, "உன்னை காவல்துறை தேடிக் கொண்டிருக்கிறது. காவல்துறைக்கு நான் போன் செய்கிறேன். நீ அரெஸ்ட்-ஆக போகிறாய்." என்று பையனிடத்தில் சொல்லிவிட்டு, காவல்துறைக்கு சொல்லி காவல்துறையினர் வருகிறார்கள். அவர்கள் வந்தபோது, கலைஞர் தன்னுடைய மகன் ஸ்டாலினின் கையைப் பிடித்து காவல் அதிகாரிகளிடம் கொடுத்து, "இந்தாருங்கள் என் மகன். கைது செய்யுங்கள்." என்று வழி அனுப்பி வைத்தார் கலைஞர். எந்த தகப்பனாவது செய்வாரா? ஏன், அவனும் அரசியலுக்கு வரவேண்டும் என்ற எண்ணம் இருந்ததினால் அந்தப் அரசியல் பழக்கத்திற்கு ஜெயிலும் ஒரு எடுத்துக்காட்டு என்பதினால் தன்னுடைய மகனை தன் கையாலேயே பிடித்து சிறைச்சாலைக்கு அனுப்பியவர் நம்முடைய கலைஞர் அவர்கள். எனவே ஸ்டாலின் சும்மா வந்துவிடவில்லை. ஜெயிலுக்கு போனார். அங்கே அடிதடி பட்டார். அந்த அனுபவங்கள் எல்லாம் பெற்று, உதை எல்லாம் வாங்கிவிட்டு, சிட்டிபாபு என்ற ஒருவர் இல்லை என்றால் இவர் இருந்திருப்பாரா? அந்த மனிதன் காப்பாற்றியதால் ஸ்டாலின் அவர்கள் நமக்கு உயிரோடு கிடைத்தார். அதன்பிறகு அவரை அரசியலில் பழக்கப்படுத்தி, கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கி, அவரை மேயர் ஆக்கி, அதன் பிறகு அமைச்சர் ஆக்கி, துணை முதல்அமைச்சர் ஆக்கி என்னென்ன செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? என்பதை எல்லாம் படிப்படியாக சொல்லிக் கொடுத்து இவ்வளவுக்கும் பிறகுதான் நம்முடைய ஸ்டாலின் அவர்கள் அந்த இடத்திற்கு வந்தார்கள்.

**கலைஞர் பாணியில் செயலாற்றும் தளபதி!**

இப்போது 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' என்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டு பதவியேற்ற தலைவர் ஸ்டாலின் அவர்கள், இன்றைக்கு 'திராவிட மாடல்' ஆட்சி என்ற பெயரை கொண்டு வந்து என்னென்ன காரியத்தை இரண்டு ஆண்டுகளில் செய்திருக்கிறார்?

அதில் ஒரு உதாரணமாக சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கலைஞர் வள்ளுவர் கோட்டம் அமைத்தார். ஸ்டாலின் - கலைஞர் கோட்டம் அமைத்தார். கலைஞர் - திருவள்ளுவருக்கு கன்னியாகுமரியில் 133 அடிக்கு சிலை செய்தார். ஸ்டாலின் அண்ணா சாலையில், பெரியார் சிலைக்கும் - அண்ணா சிலைக்கும் மத்தியில் கலைஞர் சிலை அமைத்தார். கலைஞர் - கொட்டிவாக்கத்தில் அண்ணா நூற்றாண்டு நூல் நிலையம் அமைத்தார். ஸ்டாலின் - மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூல் நிலையம் அமைத்தார். இது போன்று சொல்லிக்கொண்டே செல்லலாம். அடுத்து கடற்கரையில் கலைஞரும் - பேனாவும் என்ற சிலையை அமைக்க இருக்கிறார். எனவே கலைஞருக்கு தப்பாமல் ஸ்டாலின் பிறந்து இன்றைக்கு கலைஞருடைய பாணியில் செயலில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**இலட்சியத்தோடு வாழுங்கள்- பணியாற்றுங்கள்!**

தந்தை பெரியாரும் - பேரறிஞர் அண்ணாவும் - கலைஞரும் தொடர்ந்து நம்மோடு வாழ்வார்கள். அவர்களுடைய கொள்கைகள் வாழும். எனவே அதை உருவாக்கும் பெரும் பொறுப்பு யாரிடம் இருக்கிறது என்றால், நம்மிடம்தான் இருக்கிறது. நாமெல்லாம் செய்தால் நிச்சயமாக செய்ய முடியும். எனவே அந்த இலட்சியத்தோடு வாழ வேண்டும். சும்மா பிறந்தோம் - வந்தோம் - போனோம் என்பது இல்லை வாழ்க்கை. வந்தோம் - பிறந்தோம் - சாதித்தோம் - இலட்சியத்தை நிறைவேற்றினோம் என்ற வாழ்க்கை வேண்டும். எனவே கலைஞரை பார்த்தபிறகு - பெரியாரை பார்த்தபிறகு அண்ணாவை பார்த்தபிறகு, அப்போதும் அந்த உணர்வு நமக்கு வரவில்லை என்றால் நமக்கு உண்மையான உண்மையான உணர்வு இல்லை என்று அர்த்தம். எனவே செயல்படுகிற உணர்வை உருவாக்கிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அந்த இலட்சியத்தில் நாம் வெற்றி அடைவோம். எப்போது ஒரு குறளை சொல்லி முடிப்பேன். அதேபோல ஒரு குறளை சொல்கிறேன்,

"எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்" - என்று வள்ளுவன் சொன்னான். நாம் எண்ணியது எண்ணத்தில் - நாம் எண்ணுகின்ற இலட்சியத்தில் உறுதியாக இருந்து கடுமையாக உழைத்தால் வெற்றி நிச்சயம்... வெற்றி நிச்சயம்... இது சத்தியம்.

இவ்வாறு இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் பேசினார்.